# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No. 217/2023</u>

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24-ஆம் நாள் செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய PW-1 **வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சத்யா | வயது | : | |
| த/பெ | : | ராஜேந்திரன் | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

விபத்து எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கும் என் சகோதரிக்கும் திருமணம் ஆகிவிட்டது. என் அப்பாவும் அம்மாவும் மட்டும் தனியாக வசித்தார்கள். மனுவுக்கு பிறகு அம்மா இறந்து விட்டார். என் அப்பா ஏறிச்சென்ற வாகனத்தை ஓட்டியவர் உறவினர். இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் தான் மதுபோதையில் கவனக்குறைவாக ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது தவறில்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அன்று இரவே திருச்சி நியூரோ ஒன் மருத்துவமனையில் சேர்த்தார்கள். பெரம்பலூர் அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டை தாக்கல் செய்யாததாற்கு காரணம் அதில் இருசக்கர வாகனம் தான் விபத்து

ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு இருந்தது என்றால் சரியல்ல. தகப்பானரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை. என் அப்பா ஆதார் கார்டை தாக்கல் செய்யமுடியும். அதிக இழப்பீடு பெறுவதற்காக வருமானத்தை அதிகப்படுத்தி கூறிகிறேன் என்றால் சரியல்ல. நானும், என் சகோதரியும் என் அப்பாவின் வருமானத்தை சார்ந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணமான இருசக்கர வாகனம் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.